பாளையம் ஒன்றியங்களில் 5,103 உறுப்பினர்களைக் கொண்ட, 28 ஆரம்ப வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. எனவே, அங்கே உள்ள பனைத் தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய தொழிலை ஊக்கப்படுத்துவதற்கு, ஒவ்வொரு தனி நபருக்கும் 2,500 ரூபாய் வீதம் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களுக்கு தனிசிறப்பு சேர்த்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தனி நபர்களுக்கு என்று நிதி உதவி ஒதுக்கிக் கொடுத்தாலும், பொதுவாக அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால், ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழகத்திலே பொற்கால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற நமது ஒப்பற்ற முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பனை வாரியம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவே அதற்குரிய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு பனை வாரியம் அமைக்கின்ற பணி முடிகிறபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 646, திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS

646—

சென்னையிலிருந்து மெக்காவிற்குச் செல்ல கப்பல் போக்குவரத்து.

*5726 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக முஸ்லீம் மக்களுக்கு சென்னையிலிருந்து நேரடியாக புனித மெக்காவுக்குச் சென்றுவர கப்பல் போக்குவரத்து ஒன்றினைத் துவங்கிட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புனித மெக்காவுக்கு கப்பல் விடப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னையிலிருந்து மெக்காவுக்கு புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் பயணிகள் கப்பல் மூலம் சென்றுவர முயற்சி செய்து, அம்முயற்சி பல்வேறு நடைமுறை சிக்கல்களால் பின்னர் கைவிடப்பட்டது.

முற்பகல் 10—20

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போல் அந்தத் திட்டத்தை கைவிடாமல் அதிலே முயற்சி செய்ய கேட்டுக் கொண்டு, சிறுபான்மை மக்களுக்கு பல சலுகைகளைச் செய்துவரும் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கப்பல் விட மத்திய சர்க்காருக்கும் தெரிவித்து, அதற்கான முயற்சி செய்துகொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு, விமானத்தில் செல்வது என்பது வசதி படைத்தவர்களால் தான் செல்லமுடிகின்றது. வசதி இல்லாதவர்கள் செல்ல முடியவில்லை. அதனால், கப்பல் போக்குவரத்தை மறுபடியும் முயற்சி செய்து கொடுப்பார்களானால், அந்தக் கட்டணமும் குறையும். எல்லா மக்களும் போய்வர வசதியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு அதை மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ்ஜிற்குச் செல்லும் பயணிகள் கப்பல் மூலம் புறப்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்றால், அதற்கு முன்பாக பம்பாயிலிருந்து அந்தக் கப்பல்கள் அழைக்கப்பட்டு, பழுது பார்க்கின்ற பணிகள் எல்லாம் மிக மிகுதியாக இருக்கின்ற காரணத்தால், அத்தகைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, இதுபோன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்ற சாத்தியக் கூறுகள் இல்லை என தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்வதை விட அதை மறுபரிசீலனை செய்து ஏற்படுத்திக் கொடுக்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஹஜ் யாத்திரையை ஒரு ஆண்டிலே மேற்கொள்கின்ற பயணிகளின் எண்ணிக்கையைக்

கணக்கில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு பகுதியில் நிறைய பேர் ஹஜ் பயணம் செல்ல விரும்புகிறார்கள். எனவே, புனித ஹஜ் பயணம் செய்ய விரும்பும் அனைத்து முஸ்லீம் மக்களும் மெக்கா சென்றுவர விமானம் மூலமாவது ஏற்பாடு செய்துதர முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள மனு அனுப்புகின்ற பயணிகள், நமது தமிழகத்திலிருந்து அனுப்புகின்ற மத்திய ஹஜ் கமிட்டியினுடைய பரிந்துரைகளின் மூலமும் மாநில ஹஜ் கமிட்டியும் இணைந்து, தமிழகத்திலேயிருந்து இந்த ஆண்டு ஆயிரம் நபர்கள் செல்கிறார்கள். எனவே, மனு அனுப்புகின்ற அனைத்து நபர்களுமே தமிழகத்திலேயிருந்து சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி சந்திரசேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணத்தைப் பற்றி இங்கே குறிப்பிடுகின்றபோது விமானக் கட்டணம் அதிகம் என்று சொன்னார்கள் சமய சார்பற்ற புரட்சித் தலைவியினுடைய அரசு இந்தக் கட்டணத்தை சலுகை அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின்படி அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்வதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை என தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தர்மலிங்கம்.

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஹஜ் வழிபாட்டிற்கு ஆண்டிற்கு ஒரு முறை தான் நாம் செல்கிறோம். எனவே, கப்பலை வாடகைக்கு எடுத்து, அந்தப் பயணிகளுக்கு அரசு இதைப் பயன்படுத்துமா என்று அறிய விரும்புவதோடு, இந்தக் கப்பலில் "ஒன்றே

1992 ஏப்ரல் 27]

குலம் ஒருவனே தேவன்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போன்று நமது தமிழகத்திலே இருக்கின்ற தமிழர்களையும் அந்த புனித ஹஜ்ஜிற்கு அழைத்துச் செல்வதற்கு துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் பயணிகள் புனித யாத்திரையை மேற்கொள்வதற்காக மத்திய ஹஜ் கமிட்டியும் மாநிலத்திலுள்ள ஹஜ் குழுவும் இணைந்து ஹஜ்ஜிற்கு செல்லுகின்ற பயணிகளை கப்பல் மூலம் செல்கின்ற பயணிகள் கப்பலில் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு சிக்கலான கேள்வி ஒன்றையும் தொடுத்துள்ளார்கள். எனவே, அதை ஹஜ் குழுவோடு கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோ. காளன்.

திரு. கோ. காளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹஜ் புனித யாத்திரைக்காக விசேஷ கப்பல்கள் விட வேண்டும் என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் பலபேர் கேட்டிருக்கிறார்கள். சமீபத்திலே அந்தமான் நிக்கோபார் என்ற கப்பல் ஹஜ் பயணத்திற்காக எடுத்துச் செல்வதற்காக மைய அரசால் ஏற்பாடு செய்யப்பட்டு விடப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தமான் நிக்கோபார் செல்லக்கூடிய விமானப் பயணிகளுக்கு, அந்த கப்பலை புனித யாத்திரைக்கு அனுப்பி விட்டதால், சாதாரணமாக கப்பலிலே போகக் கூடிய சார்ஜ் என்னவோ அதை மட்டும் வாங்கிக் கொண்டு விசேஷ விமானங்களை அந்தமான் பயணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே போல தமிழகத்திலேயிருந்து செல்லக்கூடிய ஹஜ் பயணிகளுக்கு கப்பல் கிடைக்காவிட்டாலும்கப்பலிலே செல்லக் கூடிய கட்டணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு விசேஷ விமானங்கள் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவை பொறுத்த மட்டில், மத்திய ஹஜ் குழுவும் மாநில ஹஜ் கமிட்டியும் இணைந்து இதுபோன்ற பயணிகள் செல்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய ஹஜ் கமிட்டியிலே இருந்து அதற்குரிய நிதியைப் பெற்றுத் தருவார்களேயானால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசும் ஹஜ் பயணிகளுக்கு அந்த வசதி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு புரட்சித்தலைவியின் மூலமாக ஆலோசனை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.